காலக்கெடுவுடன் கூடிய உயர்நீதிமன்ற அறிவுறுத்தல் / மிக அவசரம்

ந.க. எண். 000252/குற்றம்4(2)/2019

காவல்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை – 600004.

நாள் – 30.01.2019

சுற்றறிக்கை குறிப்பாணை

**பொருள்:** குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 41 கீழ் அறிவிக்கை மற்றும் ஒப்புகைப் படிவம் நடைமுறையைக் கடுமையாக அனுசரித்தல் – அமந்தீப் சிங் ஜோஹர்– எதிர்– தேசிய தலைநகர் பிரதேசம் டெல்லி வழக்கில் (உரிமையியல் நீதிப் பேராணை கோரும் மனு எண்.7608/2017) 07.02.2018 நாளிட்ட தீர்ப்புரையில் டெல்லி உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள மாதிரிப் படிவங்கள் – குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவில் அது தொடர்பான திருத்தங்களை மாநில அரசு இயற்றும் வரையில் கடைப்பிடிக்க வேண்டியது – சம்பந்தமாக.

**பார்வை:** குற்றவியல் பிற மனு எண்.2688/2018 –ல் 07.01.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையின் கீழ் மாட்சிமை மிகு சென்னை உயர்நீதிமன்றம் 25.01.2019 அன்று தமிழ்நாடு காவல் துறை இயக்குநர் அவர்களுக்கு வழங்கிய அறிவுறுத்தல்.

***

மேற்படி பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை எவ்வித பிறழ்தலும் இன்றிக் கடுமையாக அனுசரித்திட வேண்டுமென அனைத்து நிலையக் காவல் அதிகாரிகளுக்கும் உடனடியான அறிவுரைகளை வழங்கிட வேண்டுமென அனைத்து நகர காவல் ஆணையர்கள் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோரின் கவனம் இவற்றின்பால் ஈர்க்கப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு:

1. குற்றவியல் நடைமுறை சட்டம் 41–A பிரிவானது, 7 வருடங்கள் அல்லது அதற்குக் குறைவான சிறைத்தண்டனை வழங்கப்படக்கூடிய குற்ற வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள எதிரியைக் கைது செய்ய வேண்டிய அவசியம் இல்லாத போது, செயல்பாட்டுக்கு வருகிறது. அத்தகைய வழக்குகளில், தேவைப்படும்போது ஆஜராக வேண்டுமென அறிவுறுத்தி எதிரிக்கு காவல் துறையினர் அறிவிக்கை அனுப்ப வேண்டும்.

2. அமந்தீப் சிங் ஜோஹர்–எதிர்–தேசிய தலைநகர் பிரதேசம் டெல்லி என்.ஆர். (உரிமையியல் நீதிப் பேராணை கோரும் மனு எண்.7608/2017) வழக்கில் வழங்கப்பட்ட 07.02.2018 நாளிட்ட தீர்ப்புரையில் குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 41–A கீழ் அறிவிப்பு அனுப்புவதற்கான மாதிரிப் படிவமும் மற்றும் அதன்



File No. A–60RTI2(2)/411/2026–RTI2–POLICE DEPT–DGP (Computer No. 4310155)

Scanned with OKEN Scanner

உட்பொருளும், மேலும் அதனை சார்வு செய்வதற்கான முறை மற்றும் விதம் ஆகியனவும் உள்ளது. குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 41–A கீழ் அறிவிக்கை அனுப்புவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் மாதிரி படிவம், அதற்கான ஒப்புகை படிவம் / சீட்டு ஆகியன இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

" 41 A. காவல் அதிகாரி முன்பாக ஆஜராவதற்கான அறிவிப்பு.

(1) காவல் அதிகாரி, அனைத்து வழக்குகளிலும் பிரிவு 41 உட்பிரிவு–1 கீழ் ஒரு நபரைக் கைது செய்ய வேண்டிய அவசியம் இல்லாதபட்சத்தில் அத்தகைய நபருக்கு எதிராக காரணத்துடன் கூடிய புகார் தெரிவிக்கப்பட்டிருந்தாலோ அல்லது அது தொடர்பாக நம்பகமான தகவல் பெறப்பட்டிருந்தாலோ அல்லது அந்நபரைக் கைது செய்வதற்குப் பிடி ஆணை தேவைப்படாத குற்றத்தைப் புரிந்துள்ளார் என்ற நியாயமான சந்தேகம் இருக்கும்பட்சத்திலோ அந்நபரை அறிவிக்கையில் விளக்கியுரைக்கப்பட்டபடி தனக்கு முன்பாகவோ அல்லது வேறு இடத்திலோ ஆஜராகும்படி குறிப்பிட்டு அறிவிக்கை வழங்க வேண்டும்.

(2) எந்த ஒரு நபருக்கேனும் அத்தகைய அறிவிக்கை வழங்கப்படும்பட்சத்தில் அந்த அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது சம்பந்தப்பட்ட அந்த நபரின் கடமையாகும்.

(3) அத்தகைய நபர் அறிவிப்பிற்கிணங்க நடந்து கொண்டாலோ அல்லது தொடர்ந்து அவ்வாறு இணங்கி நடந்துவரும் பட்சத்திலோ, காவல் அதிகாரி அவரைக் கைது செய்ய வேண்டுமென்ற கருத்தோடு அதற்கான காரணங்களை முறையாகப் பதிவு செய்தால் தவிர, அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் தொடர்பாக அந்நபரைக் கைது செய்யக்கூடாது.

(4) அத்தகைய நபர், எந்த ஒரு நேரத்திலும் அறிவிக்கையில் கண்ட நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறினாலோ அல்லது தன்னைத் தானே அடையாளப்படுத்திக் கொள்ள விருப்பமின்றி இருந்தாலோ, இதுதொடர்பாக அதிகாரம் படைத்த நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணைகளைப் பொறுத்து, அறிவிப்பில் கண்ட குற்றம் தொடர்பாக அந்நபரைக் காவல் அதிகாரி கைது செய்யலாம்".

"...(c) காவல் அதிகாரி, குற்றஞ்சாட்டப்பட்டவரைக் கைது செய்ய வேண்டாமென முடிவு செய்யும் பட்சத்தில், குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 41–A செயல்பாட்டுக்கு வருகிறது. அத்தகைய வழக்குகளில், காவல் அதிகாரி குற்றஞ்சாட்டப்பட்டவரை, அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இடம் மற்றும் நேரத்தில் தனக்கு முன்பாக ஆஜராக வேண்டுமென அறிவுறுத்தி அறிவிக்கை





Scanned with OKEN Scanner

ஒன்றை வழங்கலாம். காவல் அதிகாரி, அத்தகைய அறிவிப்பினை வழக்குப் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வார காலத்திற்குள் நீதித்துறை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு ஒரு நகலை அனுப்பிய பிறகு குற்றஞ்சாட்டப்பட்டவருக்குச் சார்வு செய்ய வேண்டும். அவ்வாறு அறிவிக்கையினை சார்வு செய்வதற்கான கால நிர்ணயத்தை காவல் கண்காணிப்பாளர் அதற்கான காரணங்களை எழுத்து மூலம் பதிவு செய்ததற்குப் பிறகு நீட்டிப்பு செய்யலாம்.

(3) சம்பந்தப்பட்ட சந்தேக நபர்/குற்றஞ்சாட்டப்பட்ட நபர் குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 41–A ன் கீழ் வழங்கப்பட்ட அறிவிக்கையில் கூறப்பட்டுள்ள நெறிமுறைகளைக் கட்டாயம் அனுசரித்து, தேவைப்பட்ட நேரம் மற்றும் இடத்தில் ஆஜராக வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவர், ஏற்கத் தகுந்த மற்றும் நியாயமான காரணத்தினால் ஆஜராக முடியாத சூழ்நிலையில் இருந்தால், அவ்வாறு வராமல் இருப்பதற்கான நியாயமான காரணத்தை வெளிப்படுத்த இயலாத நிலையில் இருந்தால், அக்குற்றஞ்சாட்டப்பட்ட நபர், உடனடியாக அவ்வாறு அவர்/அவள் ஆஜராகக் குறிப்பிடப்பட்டிருந்த தேதிக்கு நான்கு வேலை நாட்களுக்கு மிகாத வகையில் நியாயமான காலகட்டத்தில் மாற்று நேரம் வழங்கும்படி கோரி, புலன் விசாரணை அதிகாரிக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

(4) புலன் விசாரணைக்கு குந்தகம் விளைவிக்காத பட்சத்தில், அதற்கான நியாயமான காரணங்கள் மட்டுமே இருக்குமானால் வழக்கு நாட்குறிப்பில் அதனைப் பதிவு செய்த பிறகு, காவல் அதிகாரி அவ்வாறு ஆஜராவதற்கான காலகட்டத்தை மாற்றியமைக்கலாம். அவ்வாறான நீட்டிப்பு புலன் விசாரணையை காலதாமதம் செய்வதற்கோ அல்லது சந்தேக நபர்/குற்றஞ்சாட்டப் பட்டவர் ஆஜராவதைத் தட்டிக் கழிக்க, அவ்வாறு கால நீட்டிப்பு கேட்கிறார் என புலன் விசாரணை அதிகாரி நம்பினால், (சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தின் நிலைய காவல் அதிகாரி / காவல் கண்காணிப்பாளர் ஆகியோருக்குத் தகவல் தெரிவிப்பதன்பேரில்) அத்தகைய வேண்டுகோளுக்கு மறுப்பு தெரிவித்து மேற்படி நபர் கட்டாயம் ஆஜராக வேண்டுமென அறிவுறுத்தலாம்.

(5) ஒரு சந்தேக நபர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 41–A ன் கீழ் முறையாக அறிவிக்கையினைப் பெற்று, புலன் விசாரணை/விசாரணைக்காக சம்பந்தப்பட்ட அலுவலர் முன்பு காவல் நிலையத்தில் ஆஜராகும்போது, சம்பந்தப்பட்ட புலன் விசாரணை அதிகாரியிடம் அதற்கான ஒப்புகையைக் கோரலாம்.

(6) சந்தேக நபர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் காவல் நிலையம் தவிர்த்த வேறு ஒரு இடத்தில் (குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 41–A ல் குறிப்பிட்டுள்ளபடி)





Scanned with OKEN Scanner

Scanned with OKEN Scanner

ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தால், அந்தச் சந்தேக நபருக்கு அவ்வாறு ஆஜராவதற்கான ஒப்புகையை கோருமிடத்தில் தனியார் சாட்சிகள் இருந்தால் அவர்களின் சான்றொப்பத்துடனும் மேலும் அதில் சம்பந்தப்பட்ட புலன் விசாரணை அதிகாரியின் சான்றுக் கையொப்பத்துடனும் கூடிய ஒப்புகைப் படிவத்தைப் பெறுவதற்கு உரிமை உண்டு.

(7) முறையாக அட்டவணைப்படுத்தப்பட்ட, வரிசையாக எண்ணிடப்பட்ட அறிவிக்கைகள் இரண்டாம் படி / கார்பன் நகல் படிவங்களில் சிறு புத்தக வடிவில் நிலைய காவல் அதிகாரியால் புலன் விசாரணை அதிகாரிக்கு வழங்கப்பட வேண்டும்.

<u>அறிவிக்கையானது கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும்:</u>

a. வரிசை எண்

b. வழக்கு எண்

c. ஆஜராவதற்கான தேதி மற்றும் நேரம்

d. இணங்க மறுத்தால் ஏற்படக்கூடிய தொடர் விளைவுகள்.

e. ஒப்புகைப் படிவம்

<u>புலன் விசாரணை அதிகாரி கீழ்க்கண்ட நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டும்:</u>

a. அசல் அறிவிக்கை குற்றஞ்சாட்டப்பட்டவர் / சந்தேகப்படும் நபருக்கு சார்வு செய்யப்பட வேண்டும்.

b. கார்பன் நகல் (வெள்ளைத் தாளில்) ஒன்றை புலன் விசாரணை அதிகாரி அவர்/அவளது வழக்கு நாட்குறிப்பில் வைத்திருந்து, தேவைப்படும்போது அதனை சம்பந்தப்பட்ட குற்றவியல் நடுவரிடம் காண்பிக்க வேண்டும்.

c. பயன்படுத்தப்பட்ட அத்தகைய சிறு புத்தகங்களைப் புலன் விசாரணை அதிகாரி காவல் நிலையத்தின் நிலைய காவல் அலுவலரிடம் கொடுத்து வைத்து, அவர் அதனை அவ்வழக்கின் புலன் விசாரணை முடிந்து குற்றவியல் நடைமுறை நெறித் தொகுப்புப் பிரிவு 173(2) கீழ் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரையில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

d. அத்தகைய புத்தகங்களைப் பாதுகாத்து வைத்திருத்தல் மற்றும் அழித்தல் ஆகியன தொடர்பாக காவல்துறை உகந்ததொரு விதிமுறைகளை வகுக்க வேண்டும்.





Scanned with OKEN Scanner

Scanned with OKEN Scanner

(29)

(8) நடைமுறை நெறித் தொகுப்பு சிறு புத்தகங்கள் மேற்படி விளக்கங்கள் கொண்ட வழிகாட்டுதல்களுடனும் மற்றும் அவற்றின் நிலையான பிரிவுகளில் செய்யப்படும் மாற்றங்கள் அடங்கிய அத்தகைய அறிவிக்கைகளின் படிவங்கள் அதற்கான ஒப்புகைப் படிவங்களுடன் பராமரித்து வைப்பட வேண்டும்.

(9) மேற்படி குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவுகளில் கட்டாயப்படுத்தப் பட்டவைகளை புலன் விசாரணை அதிகாரி முறையாகக் கடைப்பிடிக்கத் தவறும் பட்சத்தில், அவருக்கு எதிராக உரியவாறு துறை நடவடிக்கை/ஒழுங்கு முறை தவறிய செயல்முறை நடவடிக்கை ஆகியன அதற்குப் பொருந்தக் கூடிய விதிமுறைகளின் கீழ் எடுக்கப்படுவதோடு, அவர் மாட்சிமைமிகு உச்சநீதிமன்றம் அர்னேஷ் குமார்–எதிர்–பீகார் அரசு (2014) 8 SCC 273 என்ற வழக்கில் வழங்கிய அறிவுரைகளின்படி நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்கும் ஆளாக நேரிடும் என்பதை அறியவும்.

இணைப்பு மேற்படி

ஒம்/– தே.க. ராஜேந்திரன்
காவல் துறை தலைமை இயக்குநர்

பெறுநர்

அனைத்து நகர காவல் ஆணையர்கள்,
அனைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் (மண்டலம் வழியாக)

கூடுதல் காவல் துறை இயக்குநர்கள்,
குற்றப்பிரிவு குற்ற புலனாய்வு துறை, குற்றம், பொருளாதார குற்றப்பிரிவு, இருப்புப்பாதை, குடிமைபொருள் வழங்கல் குற்றப் புலனாய்வ துறை, சென்னை

நகல்:

அனைத்து மண்டல காவல்துறை தலைவர்கள்.

காவல்துறை தலைவர்கள்,

இருப்புப்பாதை, நுண்ணறிவு, நுண்ணறிவு (உள்நாட்டு பாதுகாப்பு), சென்னை.

/உத்தரவுபடி அனுப்பப்படுகிறது/

30/1/19

காவல்துறை தலைவர்,
பொது

30/01/2019





Scanned with OKEN Scanner

Scanned with OKEN Scanner

Rc.No. 000252 /Crime 4(2)/2019

Office of the
Director General of Police,
Tamilnadu, Chennai – 600 004.

Dated: 07 .02.2019

## CIRCULAR MEMORANDUM

Sub: Notice u/s 41A Cr PC modified as per the direction given by the Hon'ble Madras High Court – Instructions issued for the strict adherence – Regarding.

Ref: Chief Office circular memorandum in R.C.No.000252/ Crime 4(2)/ 2019 dated 30.01.2019

***********

In continuation to the circular memo cited, the notice u/s 41 A Cr PC is modified in S.No. g and h, as per the direction issued by the Hon'ble Madras High Court and the modified notice u/s 41 A Cr PC is enclosed.

2. Hence, all Commissioners of Police in Cities and all Superintendents of Police in Districts are requested to issue immediate instructions to all SHOs in time for a strict compliance.

Encl: As above.

Sd/- Vijaykumar
Additional Director General of Police
(Law & Order)

To
All Commissioners of Police in Cities
All Superintendents of Police in Districts

The Additional Directors General of Police, CB CID, Crime, EOW, Railwayas, Civil Supplies CID, Chennai.

Copy to:
All Zonal Inspectors General of Police,
The Inspectors General of Police,
Railways, Intelligence, Intelligence (Internal Security), Chennai.

// True copy / Forwarded / By order//

Administrative Officer
07/02/19

Scanned with OKEN Scanner

Scanned with OKEN Scanner

## MODEL NOTICE U/S SECTION 41A CrPC

Sr.No ..........

Police Station ................

To, [Name of Accused/Notice ] [Last Known Address] [Phone No./Email ID (if any)]

**Notice under Section 41 A Cr.P.C.**

In exercise of the powers conferred under subsection (1) of section 41A of Cr.P.C., I hereby inform you that during the investigation of FIR/Case No. .................. dated .......... u/s .. ........ ..........................registered at .............................. Police Station ................, it is revealed that there are reasonable grounds to question you to ascertain facts and circumstances from you, in relation to the present investigation. Hence you are directed to appear before me at ....... am/pm on ...... at ......................Police Station.....................................

**You are directed to comply with all and/or the following directions:-**

(a) You will not commit any offence in future.

(b) You will not tamper with the evidences in the case in any manner whatsoever.

(c) You will not make any threat, inducement, or promise to any person acquainted with the fact of the case so as to dissuade him from disclosing, such facts to the court or to the police officer

(d) You will appear before the Court as and when required/directed.

(e) You will join the investigation of the case as and when required and will cooperate in the investigation.

(f) You will disclose all the facts truthfully without concealing any part relevant for the purpose of investigation to reach to the right conclusion of the case, subject to your right of defense.

(g) You will produce all relevant documents/material required for the purpose of investigation, subject to your right of defense.

(h) You will render your full co-operation/assistance in apprehension of the accomplice.

(i) You will not allow in any manner destruction of any evidence relevant for the purpose of investigation/trial of the case.

(j) Any other conditions, which may be imposed by the Investigating Officer/SHO as per the facts of the case.

Failure to attend/comply with the terms of this Notice, can render you liable for arrest under Section 41 A (3) and (4) of CrPC.

[Signature] [Name and Designation] [Affix seal] ..............................................................................

Sr No . ...

Scanned with OKEN Scanner

Scanned with OKEN Scanner